கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

முன்னிலை**:** திரு.ஜி.சரண்**,B.L., P.G.Dip.in Env.Law.,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, திண்டுக்கல் (முழு கூடுதல் பொறுப்பு)

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29 ஆம் நாள் செவ்வாய்கிழமை.

இ.ம. எண்.**3/2024**
உள்
அ.வ. எண்.295/2022

1. பி.சரோஜினி
2. பி.மைதிலி ராஜலட்சுமி ... மனுதாரர்கள் /பிரதிவாதிகள் 1 மற்றும் 2

/எதிர்/

டி.கண்ணன் ... எதிர்மனுதாரர் / வாதி

இம்மனு 22.04.2025-ஆம் தேதி இந்நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திருவாளர் ஆர்.சரவணன் அவர்களும், எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர்கள் திருவாளர்கள் எஸ்.நாகராஜ் மற்றும் டி.சிவசந்திரன் ஆகியோர்களும் ஆஜராகி, இரு தரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும், இன்றுவரை இந்நீதிமன்ற பரிசீலினையில் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

உத்தரவு

இம்மனு மனுதாரர்கள்/1,2 பிரதிவாதிகளால் உ.ந.மு.ச. கட்டளை 16 விதி 1(2) உ/இ விதி 7-A-ன்படி தாக்கல் செய்யப்பட்டு மனுவில் கண்ட 1)K.ராஜா, 2)G.ஸ்ரீனிவாசன் மற்றும் 3) K.கௌதம் ஆகியோர்கள் விசாரிக்க அனுமதித்து உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சாராம்சம் **:**

இந்த மனுதாரர்கள் அசல் வழக்கில் 1, 2 பிரதிவாதிகள். எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி. இந்த எதிர்மனுதாரர்/வாதியானவர் அசல் வழக்கினை பிராமிசரி நோட்டில் கண்ட தொகையை வட்டியுடன் வசூல் செய்ய

தீர்ப்பளிக்கக்கோரி இந்த மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். 2ம் மனுதாரர், கடந்த 06.08.2013ம் தேதி K.ராஜா த/பெ.கிருஷ்ணன் நாடார் என்பவரிடம் ரூ.5,00,000/-க்கு அடமான பத்திரம் எழுதி வேடசந்தூர் சார்பதிவகத்தில் பதியப்பட்டது. பின்னிட்டு கடந்த 09.04.2015ம் தேதி மேற்படி ஆவணம் ரத்து செய்யப்பட்டது. மீண்டும் கடந்த 14.09.2018ம் தேதி ரூ.8,10,000/-க்கு வேடசந்தூர் சார்பதிவகத்தில் அடமானம் பதியப்பட்டது, அந்த சமயத்தில் பிரதிவாதிகள் கையெழுத்து செய்த இரண்டு வெற்று புரோநோட்டுகள் ஷை ராஜா வசம் கொடுத்தனர். மேலும் இந்த மனுதாரர்கள் K.ராஜா த/பெ.கிருஷ்ணன் நாடார் என்பவரிடம் கடந்த 04.11.2019ம் தேதி ரூ.20,00,000/-க்கு அடமான பத்திரம் எழுதி வேடசந்தூர் சார்பதிவகத்தில் பதியப்பட்டபோதும் பிரதிவாதிகள் கையெழுத்து செய்த இரண்டு வெற்று புரோநோட்டுகளை ஷை ராஜா வசம் கொடுத்தனர். மேற்படி புரோநோட்டுகளில் ஒன்றை வாதி மோசடியாக பயன்படுத்தி மேற்படி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளார். பிரதிவாதிகள், வாதியிடம் எப்போதும் ரூ.9 லட்சம் கடன் பெறவில்லை. தாவா புரோநோட்டு உண்மையல்ல. வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை. எவ்வித கடன் வரவு செலவும் நடைபெறவில்லை. தாவா புரோநோட்டு சரியான பிரதிபிரயோஜ-னத்தின் பேரில் ஏற்படுத்தப்படவில்லை. ராஜாவின் தூண்டுதலின் பேரில் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதியனாவர் பிராது பத்தி 4ல் பிரதிவாதி வாதியின் வீட்டில் வைத்து 1)ஜி.ஸ்ரீனிவாசன் , த/பெ.குணாமலை மற்றும் 2)கே.கௌதம், த/பெ.காளியப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் கடன் பெற்றதாக குறிப்பிட்டுள்ளார். ஆகையால் 1)K.ராஜா, 2) G.ஸ்ரீனிவாசன் மற்றும் 3) K.கௌதம் ஆகியோர்கள் விசாரிப்பதன் மூலம் வாதியின் வழக்கு பொய்யானது என்பதை இந்நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்த இந்த மனுதாரர்கள் இம்மனுவினை தாக்கல் செய்து மேற்படி மூன்று நபர்களையும் விசாரிக்க கோருகின்றார்கள். மனுப்படி உத்தரவாகவேண்டும்.

3. எதிர்மனுதாரர் தரப்பு எதிர் உரையின் சாராம்சம்:

மனு சட்டப்படியும் சங்கதிகளின்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரரால் உண்மை என ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர

மற்றவை மறுக்கப்படுகின்றது. அவற்றை மனுதாரரே நிரூபிக்கவேண்டும். வா.ச.1 னை இதுவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை செய்யாதநிலையில் வாதி ரப்பு சாட்சிகள் நிறைவடையாத நிலையிலும் புரோநோட்டு சாட்சிகளை பிரதிவாதிகள் தரப்பில் தற்போது விசாரிக்க தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு சட்டப்படி செல்லத்தக்கதல்ல. உண்மையில் இந்த வாதியும், பிரதிவாதிகளும் குடும்ப நண்பர்கள், பிரதிவாதிகள் வேடசந்தூர் நாடார்தெருவில் குடியிருந்து வருகிறார்கள். 1ம் பிரதிவாதியின் மகள் - 2ம் பிரதிவாதி . 2ம் பிரதிவாதி ஆன்லைன் டிரேடிங் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருகிறார். எனவே பிரதிவாதிகளின் குடும்பத் தேவைக்காகவும், தொழில் வளர்ச்சிக்காகவும் ரூ.9,00,000/-ஐ கடந்த 01.10.2020ம் தேதியில் வாதியிடம், சாட்சிகள் முன்பு பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டு அதன் உறுதிக்காக, தாவா புரோநோட்டில் இரு பிரதிவாதிகளும் கையெழுத்து செய்து கொடுத்துள்ளார்கள். தாவா வழக்கு தாக்கல் செய்த பின்பு பிரதிவாதிகளின் வழக்கறிஞர் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் வாதியிடம் எவ்வித கடனும் பிரதிவாதிகள் பெறவில்லை என்றும், பிரதிவாதிகள் சொத்தை அடமானம் வைத்து இருப்பதாகவும், ஷை சொத்தினை அடையும் நோக்கில் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளதாக கூறியுள்ளார்கள். இந்த வழக்கில் தாவா புரோநோட்டில் உள்ள கையெழுத்தை பிரதிவாதிகள் ஒப்புக் கொண்டுள்ளார்கள். தாவா புரோநோட்டு ராஜா என்பவருக்கு நிரப்பப்படாமல் கொடுத்ததாக பிரதிவாதிகள் குறிப்பிட்டுள்ளார்கள். இது சம்மந்தமாக அசல் வழக்கு விசாரணைக்கு பின்தான் முடிவு செய்ய முடியும். தாவா வழக்கை பொறுத்தவரை பிரதிவாதிகள் கடன் பெற்றது உண்மையா, பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்துள்ள புரோநோட்டு உண்மையா என்பதை தீர்க்கமான விசாரணைக்கு பின்னரே அறிய முடியும். தற்சமயம் PW1 Cross என வாய்தா ஏற்பட்டுள்ள நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகளை விசாரிக்க இம்மனு தாக்கல் செய்துள்ளது என்பது வழக்கை இழுத்தடிக்கும் நோக்கிலும், வாதிக்கு வீண் அலைச்சலை ஏற்படுத்தும் நோக்கிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதி தரப்பில் புரோநோட்டு சாட்சிகளான சீனிவாசன், கௌதம், ஆகியோர்களை கூடுதல் சாட்சிகளாக விசாரிக்க தயாராக உள்ளார்கள். ஷை வாதி தரப்பில் PW1-ஐ குறுக்கு விசாரணை முடிவடையாத

நிலையில், மனுதார்கள் / பிரதிவாதிகள் தரப்பில், சாட்சிகள் விசாரிக்க தாவா மனு செய்துள்ளது சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல, பிரதிவாதிகள் சாட்சியத்தின் போது அவர்கள் கோரும் சாட்சிகளை வரவழைத்து விசாரித்து கொள்ளலாம். தற்சமயம் இம்மனு தேவையற்றது. எனவே மனுதார்கள்/ பிரதிவாதிகளின் தாவா மனுவை தள்ளுபடி செய்து அசல் வழக்கை மேல்நடத்த வேண்டி உள்ளது.

5. இருதரப்பும் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சியமோ, சான்றாவணமோ எதுவுமில்லை. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

6. இம்மனு அனுமதிக்கத்தக்கதா, அல்லவா என்பது தற்போது பரிசீலிக்க வேண்டிய பிரச்சினையாகும்.

7. <u>தீர்வு :</u>

இம்மனு உ.ந.மு.ச. கட்டளை 16 விதி 1-ன் படி தாக்கல். இந்த மனுதாரர்கள் அசல் வழக்கில் 1, 2 பிரதிவாதிகள். எதிர்மனுதாரர்/வாதி அசல் வழக்கினை பிராமிசரி நோட்டில் கண்ட தொகையை வட்டியுடன் வசூல் செய்ய தீர்ப்பளிக்கக்கோரி இந்த மனுதாரர்களுக்கு எதிராக தாக்கல் செய்துள்ளார். மனுதாரர்கள் தரப்பில் 2ம் மனுதாரர் கடந்த 06.08.2013ம் தேதி ஒரு K.ராஜா த/பெ.கிருஷ்ணன் நாடார் என்பவரிடம் ரூ.5,00,000/-க்கு அடமான பத்திரம் எழுதி வேடசந்தூர் சார்பதிவகத்தில் பதியப்பட்டதாகவும், பின்னிட்டு கடந்த 09.04.2015ம் தேதி ரத்து மேற்படி ஆவணம் செய்யப்பட்டதென்றும் மீண்டும் கடந்த 14.09.2018ம் தேதி ரூ.8,10,000/-க்கு வேடசந்தூர் சார்பதிவகத்தில் அடமானம் பதியப்பட்டதாகவும் அப்போது பிரதிவாதிகள் கையெழுத்து செய்த இரண்டு வெற்று புரோநோட்டுகள் ஷை ராஜா வசம் கொடுத்ததாகவும், மேலும் இந்த மனுதாரர்கள் K.ராஜா த/பெ.கிருஷ்ணன் நாடார் என்பவரிடம் கடந்த 04.11.2019ம் தேதி ரூ.20,00,000/-க்கு அடமான பத்திரம் எழுதி வேடசந்தூர் சார்பதிவகத்தில் பதியப்பட்டதென்றும், அச்சமயத்தில் பிரதிவாதிகள் கையெழுத்து செய்த இரண்டு வெற்று புரோநோட்டுகள் ஷை ராஜா வசம் கொடுத்ததாகவும் மேற்படி புரோநோட்டினை வாதி மோசடியாக பயன்படுத்தி மேற்படி அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும் பிரதிவாதிகள்,

வாதியிடம் எப்போதும் ரூ.9 லட்சம் கடன் பெறவில்லை என்றும், தாவா புரோநோட்டு உண்மையல்ல என்றும் வாதிக்கும், பிரதிவாதிகளுக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும் எவ்வித கடன் வரவு செலவும் நடைபெற-வில்லை எனவும், தாவா புரோநோட்டு சரியான பிரதிபிரயோஜனத்தின் பேரில் ஏற்படுத்தப்படவில்லை என்றும் ராஜாவின் தூண்டுதலின் பேரில் அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், வாதியனாவர் பிராது பத்தி 4 ல் பிரதிவாதி வாதியின் வீட்டில் வைத்து 1)ஜி.ஸ்ரீனிவாசன் , த/பெ.குணாமலை மற்றும் 2)கே.கௌதம், த/பெ.காளியப்பன் ஆகியோர்கள் முன்னிலையில் கடன் பெற்றதாக குறிப்பிட்டுள்ளதாகவும் ஆகையால் 1)K.ராஜா, 2) G.ஸ்ரீனிவாசன் மற்றும் 3) K.கௌதம் ஆகியோர்கள் விசாரிப்பதன் மூலம் வாதியின் வழக்கு பொய்யானது என்பதை இந்நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்த மேற்படி மூன்று நபர்களையும் விசாரிக்கவேண்டியுள்ளதென்றும் மனுப்படி உத்தரவாக-வேண்டும் என்றும் மேலும் இம்மனுவை அனுமதிப்பதால் இந்த எதிர்மனுதாரர்/ வாதிக்கு எவ்வித இழப்பு பாதிப்பும் எற்பட போவது இல்லை என்றும், அவ்வாறு உத்தரவிடாவிட்டால் மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வழக்கை நிரூபிக்க இயலாமல் போவதுடன் மனுதாரர்களுக்கு ஈடு செய் முடியாத இழப்பும் கஷ்டமும் ஏற்பட்டுவிடும் என்றும் எடுத்துரைத்துள்ளார்கள்.

8. இதுகுறித்து எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனு சட்டத்திற்கு புறம்பாகவும் நீதிமன்றத்தின் நேரத்தை வீணடிப்பதற்கும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதென்றும், உண்மையில் இந்த வாதியும், பிரதிவாதிகளும் குடும்ப நண்பர்கள் என்றும் பிரதிவாதிகளின் குடும்பத் தேவைக்காகவும், தொழில் வளர்ச்சிக்காகவும் ரூ.9,00,000/-ஐ கடந்த 01.10.2020 ம் தேதியில் வாதியிடம், சாட்சிகள் முன்பு பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டு அதன் உறுதிக்காக, தாவா புரோநோட்டில் இரு பிரதிவாதிகளும் கையெழுத்து செய்து கொடுத்துள்ளதாகவும் தாவா புரோநோட்டை ராஜா என்பவருக்கு நிரப்பப்படாமல் கொடுத்ததாக பிரதிவாதிகள் குறிப்பிட்டுள்ளதாகவும், இது சம்மந்தமாக அசல் வழக்கு விசாரணைக்கு பின்தான் முடிவு செய்ய முடியும் என்றும் தாவா வழக்கை பொறுத்தவரை பிரதிவாதிகள் கடன் பெற்றது உண்மையா, பிரதிவாதிகள் எழுதிக் கொடுத்துள்ள புரோநோட்டு உண்மையா என்பதை தீர்க்கமான

விசாரணைக்கு பின்னரே அறிய முடியும் என்றும், தற்சமயம் PW1 Cross என வாய்தர் ஏற்பட்டுள்ள நிலையில், பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகளை விசாரிக்க இம்மனு தாக்கல் செய்துள்ளது வழக்கை இழுத்தடிக்கும் நோக்கிலும், வாதிக்கு வீண் அலைச்சலை ஏற்படுத்தும் நோக்கிலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள-தென்றும், வாதி தரப்பிலேயே புரோநோட்டு சாட்சிகளான சீனிவாசன், கௌதம், ஆகியோர்களை கூடுதல் சாட்சிகளாக விசாரிக்க தயாராக உள்ளதாகவும், இத்தகைய சூழ்நிலையில் இம்மனுவை தாக்கல் செய்துள்ளது செய்துள்ளது சட்டப்படி ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றும், பிரதிவாதிகள் சாட்சியத்தின் போது அவர்கள் கோரும் சாட்சிகளை வரவழைத்து விசாரித்து கொள்ளலாம் என்றும், தற்சமயம் இம்மனு தேவையற்றதென்றும் எனவே மனுவை தள்ளுபடி செய்யவேண்மென்று எடுத்துரைக்கப்பட்டது.

9. மனுதாரர்கள் / பிரதிவாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 புரோநோட்டு சாட்சிகளான ஜி.ஸ்ரீனிவாசன், கே கௌதம் மற்றும் பிரதிவாதிகள் ஒரு கே.ராஜாவுடன் செய்துகொண்ட பத்திரங்கள் குறித்தும் மேற்படி மூன்று நபர்களையும் விசாரிக்க அனுமதி வேண்டி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளதைக் காணமுடிகிறது. எதிர்மனுதாரர் தரப்பில் இம்மனு அசல் வழக்கினை இழுத்தடிக்கும் நோக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் வா.சா.ஆ.1 புரோநோட்டு சாட்சிகளை இந்த வாதியே தங்கள் தரப்பில் விசாரிக்க உள்ளார் என்றும் பிரதிவாதி தரப்பில் கூடுதல் சாட்சியம் விசாரிக்க விரும்பினால் விசாரிக்கவும் வழிவகை உள்ளதென்றும் தற்போது அசல் வழக்கனாது வா.சா.1 விசாரிக்கப்பட்டுள்ளநிலையில் உள்ளதென்றும் இந்த வா.சா.1 ஐ மனுதாரர்கள் இன்னும் குறுக்குவிசாரணையே செய்யவில்லை என்றும் எனவே இத்தகைய சூழ்நிலையில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்று எடுத்துரைப்பதைக் காணமுடிகிறது. மனுதாரர்களின் தாங்கள் ராஜா என்பவரிடம் கொடுத்த புரோநோட்டை மோசடியான வாதி தயாரித்து தாக்கல் செய்துள்ளதாகவும், எனவே அந்த ராஜா என்பவரையும் மற்றும் வா.சா.ஆ.1 புரோநோட்டில் சாட்சி கையொப்பம் இட்டுள்ள இரண்டு நபர்களையும் சாட்சிகளாக விசாரிக்க கோருகிறார். இத்தகைய சூழ்நிலையில் பிரதிவாதிகள் தங்கள் தரப்பை நிரூபிக்க மேற்கண்ட 3

நபர்களையும் விசாரிக்கவேண்டுமென்று மனு தாக்கல் செய்துள்ள நிலையில் , அதற்கான வாய்ப்பினை மறுப்பது வழக்கின் இறுதி தீர்வு ஏற்படுவதற்கு காலதாமதம் ஏற்படவும், வழக்கு பெருக்கம் ஏற்படவுமே வாய்ப்பளிக்கும் என்பதாலும், மனுதாரர்கள் தரப்பில் விசாரிக்கப்படும் சாட்சிகள் குறித்து எதிர்மனுதாரர் தரப்பில் அவர்களை குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்புள்ள நிலையில் இம்மனுவை அனுமதிப்பதே இயற்கை நியதிக்கு உகந்தது என்பதாக இந்நீதின்றம் கருதி இம்மனுவை அனுமதிப்பதே ஏற்புடையதாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக**,** இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லி, அவரால் கணிணி மூலம் தட்டச்சு செய்து, என்னால் சரிபார்த்து பிழைத்திருத்தி, இன்று 2025-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

G SARAN Digitally signed by G SARAN Date: 2025.04.29 15:17:50 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
(முழு கூடுதல் பொறுப்பு)
திண்டுக்கல்.

மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் -

-இல்லை-

G SARAN Digitally signed by G SARAN Date: 2025.04.29 15:18:00 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
(முழு கூடுதல் பொறுப்பு)
திண்டுக்கல்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,

திண்டுக்கல்

இ. ம. எண். 3/2024

உள்

அ. வ. எண். 295/2022

உத்தரவு -- 29.04.2025.